# முழு பைத்தியம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# முழு பைத்தியம்

❶

**செய்தி: 65-08-15 இதை அறியாமலிருக்கிறாய்**

135. இந்த மாதம் 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' படித்தீர்களா? மனிதரும் ஸ்திரீகளும் இப்படியாக... 20, 25 வயதான பெண் களுக்கு மாதவிடாய் நின்று விடுகிறதாம். விஞ்ஞானத்தின்படி வாழ்க்கையில் ஏற்படும் இந்த மாற்றம் நடுத்தர வயதில் நிகழவேண்டும். என் காலத்தில் அது 30 அல்லது 35 வயதில் உண்டானது. என் தாயாரின் காலத்தில், ஒரு ஸ்திரீக்கு 40 அல்லது 45 வயதாகும் வரைக்கும் மாதவிடாய் நிற்பதில்லை. அதன் காரணம் என்ன? விஞ்ஞானத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கலப்படமான உணவு

மானிட சரீரத்தையே குலைத்து விட்டது - நாம் அழிந்து போய்க் கொண்டிருக்கிறவர் களாகி விட்டோம். மானிட உடல் நிலை குலைந்து காணப்பட்டால், அதிலுள்ள மூளை அணுக்களும் அந்நிலையில் தான் இருக்குமல்லவா?

136. இப்பொழுது, ஆவி இதை ஆமோதிப்பதை பாருங்கள். கர்த்தரின் நாமத்தினால், ஒரு நேரம் வரப்போகிறது. அப்பொழுது ஜனங்கள் முழுவதும் பைத்தியம் பிடித்தவர்களாய் ஆகிவிடுவார் கள். வேதம் அவ்வாறு கூறுகின்றது. அவர் கள் பயத்தில் கூக்குரலிட்டு அலறுவார்கள் தங்கள் மனதில் பெரிய பயங்கர மானவைகளை கற்பனை செய்து கொண்டு. வானொலிகளும் தொலைகாட்சிகளும் அத்தகைய பயங்கரமான காட்சிகளை காண்பிக்கின்றன. 14 மரங்கள் உயரமுள்ள எறும்புகள் இப்பூமியில் தோன்றும். 4 அல்லது 5 மைல்கள் நீளமுள்ள சிறகுகள் கொண்ட பறவை பூமியில் பறந்து

செல்லும், ஜனங்கள் அதைக் காண்பார்கள். அவர்கள் இரக்கத்துக்காக கதறி கூச்சலிட்டு அலறுவார்கள். அது வாதையாயிருக்கும். வாதைகள் உண்டாவதைக் குறித்து நான் பிரசங்கிக்கும் வரைக்கும் காத்திருங்கள்.

137. மோசே என்ன செய்தானென்று பாருங்கள்-மனிதனாக, ஆவியாக அல்ல. அவர், மோசே...' என்றார். தேவன் மோசேயிடம், "அங்கு போ" என்றார் (அவருடைய தீர்க்கதரிசியிடம்), "கை நிறைய புழுதி எடுத்துக்கொண்டு அதை ஆகாயத்தில் எறிந்து, 'கர்த்தர் உரைக்கிறதாவது. பூமியில் வண்டுகள் தோன்றும்' என்று சொல்" என்றார். அப்பொழுது ஒரு வண்டும் இல்லை. முதலாவதாக ஏதோ ஒன்று புதரில் மெல்ல நகர்வதைக் கண்டனர். பிறகு பார்த்த போது, வேறு சில வண்டுகள் தோன்றின. சிறிது கழிந்து அவை மிக அதிகமாகப் பரவி, அதன் வழியாக நடக்கவே முடியவில்லை. அவை எங்கிருந்து வந்தன? தேவன் சிருஷ்டி

கர்த்தர்! அவருக்கு சித்தமானதை அவர் செய்ய முடியும் அவர் இராஜாதிபத்தியம் உள்ளவர். அவர் பூமியின் ஒரு முனை யிலிருந்து மறு முனைவரைக்கும் சிறகு களைக் கொண்ட ஒரு பறவையை சிருஷ் டிக்க முடியும்.

138. அவன் "ஈக்கள் உண்டாகக் கடவது" என்றான். அவை மிக அதிகமாகப் பெருகி, பூமி முழுவதையும் கம்பளம் போல மூடினது. தேசத்தில் ஒரு ஈ கூட இல்லை. முதலில் ஒரு மாட்டு ஈ சுற்றிலும் பறந்து வந்தது. பிறகு 8,10,12, ஈக்கள் தோன்றின. அதன் பிறகு அதன் வழியாக யாரும் நடந்து செல்ல இயலவில்லை. சிருஷ்டி கர்த்தராகிய தேவன் தமது வார்த்தையை காத்துக் கொள்கிறார்.

139. தேவனுடைய கட்டளைக்கு இணங்கி மோசே தன் கோலை நீட்டி "தவளைகள் உண்டாகி பூமியை நிரப்பக் கடவது" என்றான். தவளைகள் உண்டாகி,

அவர்கள் அவைகளைக் குவியல் குவியலாகக் குவித்தனர். எங்கும் துர்நாற்றம்- ஒருக்கால் 40 அல்லது 50 அடிக்கு தவளை 'குவியல். அவை பார்வோனின் பாத்திர அலமாரிக்குள் நுழைந்தன .அவை... போர்வையைத் திருப்பினால் அதனடியில் 500 தவளைகள். அவை படுக்கைகளிலும், மிதியடிகளிலும் இருந்தன. எங்கு பார்த்தாலும் தவளைகள், தவளைகள். தவளைகள். அவை எங்கிருந்து வந்தன? சிருஷ்டி கர்த்தராகிய தேவன் இராஜாதிபத்தியமுள்ளவர்! அவர் என்ன உரைத்தாரோ, அதை நிறைவேற்றுவார்.

140. அவர் 'பயங்கரமான காட்சிகள் பூமியில் தோன்றுமென்று உரைத்தார். ஸ்திரீகள் கூந்தலைப்போன்ற கூந்தல் கொண்ட வெட்டுக்கிளிகள் (வெளி.9.7)- கூந்தலைக் கத்தரிக்கும் ஸ்திரீகளைப் பீடிப்பதற்காக நீண்ட கூந்தல். சிங்கங்களின் பற்களைப் போன்ற பற்கள், தேள்களின் கொடுக்குள் போன்ற கொடுக்குகளைக்

கொண்ட வால்கள். அவைகள் அநேக மாதங்கள் மனிதரை வேதனைப்படுத்தும்.

141. வாதைகளையும், முத்திரைகளை யும், ஏழு இடி முழக்கங்களையும் திறக்க நமக்கு நேரம் வரும் வரைக்கும் காத் திருங்கள்! என்ன நடக்கப்போகிறதென்று பாருங்கள். ஓ. சகோதரனே, நேரமுள்ள போதே நீ கோசேனுக்கு போய்விடுவது நல்லது. இந்த வெளிப்புறத்துக்கு எந்த கவனத்தையும் செலுத்தாதே.

---

❷

**செய்தி: 65-12-07 வழி நடத்தும் தன்மை**

330. ஓ தேவனே, நானும் செல்லட்டும், ஆண்டவரே. இயேசுவே, என்னை விட்டு சென்று விடாதேயும், பிதாவே உம்முடன் நான் செல்லட்டும். வரப்போகும் உபத்திர வங்களைக் காண நான் இவ்வுலகில்

தங்கியிருக்க விரும்பவில்லை. இந்த பைத்தியக்காரத்தனத்தின் மத்தியில் தங்கி யிருக்க எனக்கு விருப்பமில்லை, பயங்கர மான காட்சிகளை இங்கு நின்று கொண்டு காண நான் விரும்பவில்லை.... ஜனங்க ளுக்கு மூளைக் கோளாறு ஏற்படுவதை. மனிதன் மிருகங்களைப் போல் நடந்து கொள்ளவும் மிருகங்களைப் போல் காண வும் முயல்வதை நாங்கள் காண்கிறோம். ஸ்திரீகள் முகங்களில் வர்ணம் தீட்டிக் கொண்டு, மிருகங்களைப் போல் காணப்பட முயல்கின்றனர். இவை யாவும் சம்பவிக்குமென்று முன்னுரைக்கப்பட் டுள்ளதென்று நானறிவேன். அவர்களுக்கு பைத்தியம் பிடித்து, வெட்டுக்கிளிகள் ஸ்திரீகளைப் போன்ற தலைமயிர் கொண்டு எழும்பி வந்து ஸ்திரீகளை துன்புறுத்தும். அவைகளுக்கு சிங்கங்களைப் போன்ற பற்கள் இருக்கும். இவைகளை நீர் கூறியுள்ளீர். ஜனங்களுடைய பக்தி நிலை முற்றிலுமாக மாறி, அவர்களுக்கு புத்தி

மாறாட்டம் ஏற்படும். கர்த்தாவே, அது ஏற்கனவே உருவானதை நாங்கள் காண் கிறோம். ஆண்டவரே, எங்களுக்கு உதவி செய்யும். எங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் தெளிந்த புத்தியை எங்க ளுக்கு திரும்ப அளியும்.

331. ஓ, நித்திய ஜீவனின் மகத்தான தலைவரே, உமது வாக்குத் தத்தத்தை இன்றிரவு நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். பிதாவே, இந்த ஜனங்களுக்காக நான் மன்றாடுகிறேன். கர்த்தாவே, இவர்கள் ஒவ்வொருவருக்காகவும் இயேசு கிறிஸ்து வின் நாமத்தில் மன்றாடுகிறேன். தேவ னுடைய குமாரனாகிய கிறிஸ்து எங்கள் ஒவ்வொரு வருடைய இருதயங்களில் வந்து, எங்களை இயேசு கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக மாற்ற வேண்டுமென்று ஜெபிக்கிறேன் தேவனாகிய கர்த்தாவே, இதை அருள்வீராக.

332, நாங்கள் உம்மை நேசிக்கிறோம். எங்களுடைய நடத்தையில் மாறுதல் ஏற்பட்டு, நாங்கள் உமது பிள்ளைகளா யிருக்கவும், எங்கள் இருதயங்களில் உமது ஆவி அசைவாடுவதை நாங்கள் உணர வும், நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த பைத்தியம் பிடித்த காலத்தை அறிந்து கொள்ளவும் எங்களுக்கு உதவி புரியும். வாலிபப் பெண்கள் பிசாசின் வலையில் சிக்கியிருப்பதையும், வாலிபர்களுக்கும், பிள்ளைகளுக்கும் தாறுமாறான நிலை ஏற்பட்டு அவர்கள் போதை மாத்திரை களுக்கு அடிமையாயுள்ளதையும், சிக ரெட்டு புகைப்பதையும், மது அருந்து வதையும், நடத்தை கெட்டு நடப்பதையும் நாங்கள் காணும் போது, இது சாத்தானின் ஏதேன் என்பது விளங்குகின்றது.

333. தேவனே, ஏதேனை உருவாக்கு வதற்கு உமக்கு ஆறாயிரம் ஆண்டுகள் பிடித்ததென்று வேதம் கூறுகின்றது. அதை ஆள உமது குமாரனையும் அவனுடைய

மனைவியையும் (அவனுடைய மண வாட்டியை) அங்கு வைத்தீர். சாத்தான் அங்கு வந்து அதை தாறுமாறாக்கிப் போட்டான். இப்பொழுது சாத்தானுக்கு விஞ்ஞானம், கல்வி, ஞானம் என்று அழைக்கப்படுதல் போன்றவைகளின் மூலம் அவனுடைய சொந்த, புத்தி கூர்மை யுள்ள ஏதேனை உருவாக்க அவனுக்கு ஆறாயிரம் ஆண்டுகள் இருந்து வந்துள் ளன. அவன் சீர்குலைந்த, மரணத்துக் கேதுவான ஏதேனை உருவாக்கியுள்ளான்.

334. ஓ தேவனே, மறுபடியுமாக எங்களை ஏதேனுக்கு அழைத்து செல்லும். அங்கு மரணம் இருக்காது. துயரம் இருக்காது. ஆண்ட வரே, இதை அருளும். நாங்கள் தாழ்மையுடன், இரண்டாவது ஆதாம் தமது மணவாட்டிக்கு வருவதற் காக காத்துக் கொண்டிருக்கிறோம். பிதாவே, எங்களை அவருடைய ஒரு பாகமாகச் செய்யும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

335. நீங்கள் தேவனை நேசிக்கிறீர் களா?... நான் உங்களிடம் என்ன கூற முயல்கிறேன் என்பதை உணருகிறீர்களா? அதை புரிந்து கொண்டால், கைகளை யுயர்த்தி, ''நீங்கள் கூற முயல்வதை நாங்கள் புரிந்து கொண்டோம்'' என்று கூறுங்கள். இக்காலத்தின் பைத்தியத் தன்மையை உங்களால் காணமுடிகிறதா? அது எங்கு சென்று விட்டதென்று பாருங் கள். ஜனங்களிடையே ஆலோசிக்கும் தன்மையும் கூட காணப்படவில்லை. அது போய்விட்டது. நமது... எங்கே? நமது தலைவர்களும்கூட.

336. நமது ஜனாதிபதியைப் பாருங்கள். ''ஜனங்களுக்கு கம்யூனிஸம் வேண்டுமா னால், அதை ஏற்றுக் கொள்ளட்டும். ஜனங் களுக்கு விருப்ப மானது எதுவானாலும், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளட்டும்'' என்கிறார் அவர். நம்முடைய பாட்ரிக் ஹென்றிகளும் ஜார்ஜ் வாஷிங்டன்களும் எங்கே? ஒரு கொள்கைக்காக உறுதியாய்

நின்ற நமது தலைவர்கள் எங்கே? நமக்கு அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது இல்லை.

337. நமது சபைகள். நமது போதகர்கள் எங்கே ... தவறான செயல் களைப் புரியாதபடிக்கு தடை செய்யும்... ஒரு சபையை சேர்ந்து கொள் ளுங்கள். இதை செய்யுங்கள், சிறிது உணர்ச்சி பெறுங்கள் என்று கூறுகின்றனர். உலகத்தின் காரியங் களுக்கு தைரியமாய் எதிர்த்து நிற்கக் கூடிய தேவனுடைய மனிதர், அந்த தீர்க்கதரிசிகள் எங்கே?

338. நேர்மையுள்ள மனிதர்கள் எங்கே? இப்பொழுது அவர்கள் எங்குள்ள னர்? இப்பொழுதுள்ளவர்கள் மிருதுவாக வும், அறிவினால் விளைந்த கருத்துக்களை உடையவர்களாகவும் உள்ளனர். மற்றவர் கள் இப்பொழுது இல்லவே இல்லை. ஓ, தேவனே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

339. உலகத்தில் வந்து கொண்டிருக்கும் பயங்கரமான காட்சிகள். ஜனங்கள் அதற்குள் எவ்வாறு சென்று கொண்டிருக்கின்றனர் என்பதை நீங்கள் காணலாம். அது ஒருவிதமான மூளை கோளாறு. ஆனால் அது நிகழும்போது, சபை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும்.

340. தேவனே, நாங்கள் அங்கிருக்கட்டும். அதுவே இன்றிரவு இக்கட்டிடத்திலுள்ள இயற்கைக்கு மேம்பட்டவரான, நித்திய ஜீவனை இன்னமும் கொண்டுள்ள கிறிஸ்துவினிடம் நான் ஏறெடுக்கும் ஜெபமாகும். கிறிஸ்துவே, திறக்கப்பட்ட என் கண்களுடன் இங்கு இருந்து கொண்டு, உமது இரத்தத்தினால் நீர் மீட்டுக் கொண்ட உமது சபைக்காக வேண்டுதல் செய்கிறேன். தேவனே, நாங்கள் ஒருவராவது இழந்து போக வேண்டாம். நாங்கள் உம்முடனே கூட இருக்க விரும்புகிறோம். எனவே, ஓ தேவனே, எங்கள் அக்கிரமம் எல்லாவற்றிலிருந்தும் எங்களை சுத்திகரி

யும். எங்கள் பாவங்களையும் மற்றும் காரியங்களையும் போக்கும்.

---

❸

**செய்தி: 65-08-22M கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார்**

18. சில நிமிடங்களுக்கு முன்பு ஒரு வாலிபப் போதகருடனும் அவருடைய மனைவியுடனும் அந்த அறையில் பேசிக் கொண்டிருந்தேன். இவ்வுலகிலுள்ள மற்ற வரைப் போலவே அவர்களும் பயங் கொண்டவர்களாயிருக்கின்றனர். நான், "ஞாபமிருக்கட்டும், சாத்தான் உங்களைக் குத்த வந்துக் கொண்டிருக்கிறான்" என்று அவர்களிடம் கூறினேன். அது யாரா யிருந்தாலும் கவலையில்லை, உங்களைக் ஒரு குத்து குத்துவதற்கு அவன் உரிமை பெற்றிருக்கிறான். அந்த குத்து ஒருக்கால் உங்களை குருடராக்கியிருக்கலாம்;

அல்லது நாற்காலியில் அமர்ந்துக் கொண் டிருக்கும் கீல்வாதக்காரராகச் செய்திருக்க லாம்; அல்லது உங்களுக்கு நரம்பு தளர்ச் சியைக் கொடுத்திருக்கலாம். பாருங்கள்? உங்களை எந்த விடத்திலும் அவன் குத்தக்கூடும். திறந்துள்ள அந்த விடத்தில் குத்த அவனுக்கு உரிமையுண்டு. அந்த இடத்தை நீங்கள் எப்பொழுதும் மூடிக் கொண்டிருக்க கவனமாயிருக்க வேண்டும். நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நடுக்க முள்ள இக்காலத்தை பார்க்கும்போது..

19. கடந்த வாரத்தின் ஒலிநாடாக்கள் அந்த பயங்கரமான காரியங்களை உங்க ளுக்கு வெளிப்படுத்தும். என்றாவது ஒரு நாளில், நமக்கு இடம் கிடைக்குமானால், அந்த பயங்கரமான காரியங்களைக் குறித்து - இப்பூமியில் ஊற்றப்படவிருக் கும் கலசங்களைக் குறித்தும், ஏழு இடிமுழக்கங்களைக் குறித்தும் நாம் பேசலாம்... பூமியில் வரப்போகும் அந்த பயங்கரமான காட்சிகள். இன்றுள்ள

ஜனங்கள் நரம்பு தளர்ச்சி கொண்ட நிலையில் இருக்கின்றனர். முழு உலகமே..

20. சென்ற மாதத்தின் "ரீடர்ஸ் டைஜஸ்ட்' (Readers Digest) பத்திரிக்கையைப் படித்தீர்களா? அந்தக் கட்டுரையை நீங்கள் கவனித்தீர்களா? அது மகத்தான சுவிசேஷகரான பில்லி கிரகாமைப் பற்றியதாகும். அவர் மிகவும் களைப்புற்றதனால், அவரால் கூட்டங்களை நடத்த முடியவில்லை. உடல் பரிசோதனைக்காக அவர் மேயோ வைத்தியசாலைக்குச் சென்றார். அவருக்கு எவ்வித கோளாறும் இல்லையென்றும், வேண்டிய அளவிற்கு அவர் வேலை செய்வதில்லை என்றும் கண்டு பிடிக்கப்பட்டது. எனவே அவர்கள் அவருக்கு உடற்பயிற்சி கொடுத்திருக்கின்றனர். தினந்தோறும் அவர் ஒரு மைல் தூரம் ஓடுகின்றார்.

மேலும் சிறு பிள்ளைகள்- பையன்களும் பெண்களும் - இருபது வயதாகும்

போதே நடுத்தர வயதினை இப்பொழுது அடைந்து விடுகின்றனர் என்றும், அநேக பெண்களுக்கு இருபத்தைந்து வயதாகும் போதே ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு அவர் களுக்கு நின்றுவிடுகின்றது என்றும் விஞ் ஞானம் நிரூபித்துள்ளதாக அக்கட்டுரை கூறுகின்றது.

உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, சில நாட்களுக்கு முன்பு இரவு கூட்டம் ஒன்றில் பரிசுத்த ஆவியானவர் பெயர் சொல்லி அழைத்துக் கொண்டிருந்தபோது, அங்கு ஒரு பெண் உட்கார்ந்துக் கொண் டிருந்தாள். பரிசுத்த ஆவியானவர் அவளை அழைத்தபோது, அதுதான் அவளில் காணப்பட்ட கோளாறாக இருந் தது. அவளை இரண்டாம் முறை நான் பார்த்தபோது, காரியம் என்னவென்று கண்டுகொண்டேன். ஆயினும், ''அப்படி இருக்க முடியாது; அந்த பெண் மிகவும் சிறியவளாயிருக்கிறாளே'' என்று மனதில் எண்ணினேன். அவளுக்கு இருபது,

இருபத்து மூன்று வயது இருக்கும். பாருங்கள்?

21. என் தாயாரும் உங்கள் தாயாரும் நாற்பத்தைந்து, ஐம்பது வயதில்தான் அந்த பருவம் அடைந்தனர். என் மனைவி முப்பத்தைந்து வயதில் அதை அடைந் தாள். தற்பொழுது அது இருபது வயதுக்கு வந்துள்ளது. ஜன சமுதாயம் முழுவதுமே அழுகின நிலையில் உள்ளது. கலப்பட முள்ள உணவை நாம் உண்பதனால் நம்மு டைய சரீரம் இப்படி கெட்டுவிடுகின்றது. இறுக்கம் (Tension) அதனை இன்னும் அழுகச் செய்கின்றது. அப்படியிருக்க அது நமது மூளை அணுக்களையும் (Brain cells) கூட அழுகச் செய்யுமல்லவா? அதனால் தான் பெண்கள் தெருக்களில் நிர்வாண மாய் நடப்பதையும், ஜனங்கள் நூற்றிருபது மைல் வேகத்தில் காரோட்டி செல்வதையும் நாம் இப்பொழுது காண்கிறோம். முழு நாட்டிற்கும் - இல்லை முழு உலகிற்குமே -

மூளைக் கோளாறு ஏற்பட்டுள்ளது என்னும் நிலையை அது அடைந்து விட்டது.

22. கர்த்தருக்குச் சித்தமானால், நாம் ஏழு கலசங்களின் இரகசியங்களை திறந்து, பயங்கரமான காரியங்களைக் காண்பிக்கும் போது - சற்று கழிந்த பின்னர் மனிதன் பைத்திய நிலையையடைவான். அப்பொழுது அவன் எறும்புகளை மலை அளவுக்கு பெரிதாகக் காண்பதாக கற்பனை செய்து கொள்வான். நீண்ட கூந்தலைக் கொண்ட வெட்டுக்கிளிகள் பூமியில் தோன்றி (வெளி. 9:8). கூந்தலைக் கத்தரித்துள்ள ஸ்திரீகளை துன்பப்படுத்தும்- அவைகளுக்கு ஸ்திரீகளைப் போல் நீண்ட கூந்தல் தொங்கிக் கொண்டிருக்கும்; அவைகளுக்கு சிங்கத்தைப் போல் நீண்ட பற்களும், அவைகளின் வாலில் தேள்களைப் போல் கொடுக்கும் இருக்கும். அவை மனிதரை இப்பூமியில் வேதனைப்படுத்தும். அப்பொழுது எதையும் செய்யமுடியாதபடிக்கு காலதாமதமாகியிருக்கும். உங்களுக்குப்

புரிகின்றதா? பாருங்கள்? வேதனைப் படுத்தும்...

---

❹

**செய்தி: 65-11-25 கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு**

79. ஹாலிவுட் எவ்வாறு நம்முடைய பெண்களின் நற்பண்புகளை எடுத்துப் போட்டுவிட்டதென்று பாருங்கள். நான் இங்கு உட்கார்ந்து கொண்டு மூதாட்டி யாகிய சகோதரி ஷ்ரேடரை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். முன்காலத்து மகளி ருக்கு - சகோதரி மூர் போன்ற வயது சென்றவர்களுக்கு - சில ஆண்டு களுக்கு முன்பு எப்படியிருந்தது என்று ஞாபக மிருக்கும். அவர்களுடைய தாயார் அல்லது அவர்களே, இன்று பெண்கள் (சபை அங்கத்தினர்கள்!) தெருவில் நடப் பதுபோல் நடந்திருந்தால், அவர்களுக்குப்

பைத்தியம் பிடித்துவிட்டதென்றும், அவள் மேற் பாவாடை அணிய மறந்து விட்டாளென்றும் எண்ணி அறையில் பூட்டியிருப்பார்கள்.

80. அது அக்காலத்தில் பைத்தியமாக கருதப்பட்டிருந்தால், இக்காலத்திலும் அது பைத்தியமாகக் கருதப்பட வேண்டும்! கவனியுங்கள், முழு உலகமே பைத்தியத்தில் ஆழ்ந்துள்ளது என்பதை அது நிரூபிக்கிறது. உலகில் இன்று நடக்கும் கொலைகளைப் பாருங்கள் - பைத்தியக்காரச் செயல்! வெளிப்படுத்தின விசேஷத்தில் உரைக்கப்பட்டுள்ளவைகளை இவை எல்லாமே நிறைவேற்றுகின்றன. அதை இந்த வாரம் நாம் பார்ப்போம். அந்த பயங்கரமான காரியங்கள்... அவை இயற்கையானவை அல்ல, ஆவிக்குரியவை. அவை ஜனங்கள் பர்வதங்களையும் குன்றுகளையும் நோக்கி தங்கள் மேல் விழும்படியாக கூக்குரலிடும்படி செய்யும்.

81. இந்த உலகம் முழு பைத்தியத் துக்குள் இப்பொழுதே சென்றுவிடும். அது ஏறக்குறைய அந்நிலைக்கு வந்துவிட்டது. அதன் காலடிகளை நீங்கள் காணலாம். அது தெருக்களில் நடந்து செல்கிறது, அது சபை இருக்கைகள் வரைக்கும் வந்து விட்டது - முழு பைத்தியம். நாகரீக மக்கள் நினைத்தும்கூட பார்க்க முடியாத செயல் களை அவர்கள் புரிகின்றனர்.

82. பெண்களுக்கு ஹாலிவுட் என்ன செய்துவிட்டதென்று பாருங்கள். அது எவ்வாறு பெண்ணின் புனித கற்பை களவாடிவிட்டதென்று பாருங்கள். இப்படி நாம் சொல்லிக் கொண்டே போகலாம். பாருங்கள், இவைனைத்தும் அவள் இழந்துவிட்டாள். அவள் எப்படி அதை இழந்தாள்? ஏதேன் தோட்டத்தில் இருந்தது போல, சபை என்னப்படும் தந்திரமுள்ள ஒரு கருவி இருப்பதே அதற்கு காரணம். தந்திரமுள்ள பிசாசு, ஏதேன் தோட்டத்தில் செய்தது போல், சபைக்குள் நுழைந்து

அவளை வஞ்சித்துவிட்டான். அவள் வஞ்சிக்கப்பட்டாள். ஸ்திரீ நினைக்கிறாள் - அவள் தவறு செய்ய நினைக்கவில்லை. அவள் வேண்டு மென்று செய்யவில்லை. ஆனால் அவள்... "அவள் வஞ்சிக்கப்பட் டாள்" என்று 2 தீமோத்தேயு 3ம் அதிகாரம் உரைக்கிறது (2 கொரி 11:3-தமிழாக் கியோன்). வஞ்சிக்கப்படுதல் என்பது மனப்பூர்வமாய் செய்யும் செயலைக் குறிப்பதல்ல. அவள் ஏமாற்றப்பட்டு அதை செய்யத்தூண்டப்பட்டாள்.

83. இன்றைக்கும் அதுதான் நடந்து வருகிறது. அவள் தொலைக்காட்சி, பத்திரி கைகள், ஜனங்கள், தெருக்களில் நடப் பவை போன்றவைகளினால் வஞ்சிக்கப் பட்டுவிட்டாள். நவீன காலத்து பெண்கள் பத்திரிகைகளில் படங்களைப் பார்க்கின் றனர், தெருக்களில் நடந்து செல்லும் பெண்களைக் காண்கின்றனர், கடைகளில் விற்கப்படும் உடைகளைக் காண்கின்றனர்.

84. நகரத்தின் அதிபதியாகிய பிசாசு ஜனங்களின் மத்தியில் வந்து, இவைகளை செய்யும்படி அவர்களை வஞ்சித்து விட்டான். ஸ்திரீயானவள் தான் சரி என்று நினைத்துக்கொள்கிறாள். ஆனால் அவள் மரித்துப்போனதை அறியாமலிருக்கிறாள். அவள் தேவனை விட்டு தூரம் சென்று விட்டாள். அது எவ்வளவு தந்திரமுள்ள தென்றும், அவள் எப்படி இவையனைத் தும் இழந்துவிட்டாளென்றும் பார்த்தீர் களா?

85. இயேசு அதைக் குறிப்பிட்டிருக் கிறார் என்பதை இன்று நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். நீங்கள் விரும்பினால் அதை நாம் இப்பொழுது படிக்கலாம். இது நிறைவேறும் என்று இயேசு குறிப்பிட் டுள்ளார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவருடைய வாழ்நாளின் கடைசி சில மணி நேரங்களில், அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, இதைக் கூறினார். அதை நாம் படிப்போம். லூக்கா

சுவிசேஷம் 23ம் அதிகாரம் 27ம் வசனம் முதல். இதை ஞாயிறு பள்ளி பாடமாகக் கருதி சிறிது நேரம் இதைப் பார்ப்போம். இதை கோடிட்டு வைத்திருக் கிறேன் என்று நினைக்கிறேன்- இயேசு கல்வாரிக்குச் செல்லுதல். நான் படிக்கும்போது கவன மாய் கேளுங்கள். சரி. லூக்கா 23:27. அந்த பகுதிதான் என்று நினைக்கிறேன். அப்படித் தான் என் குறிப்பு புத்தகம் கூறுகிறது. ஆம், இதோ உள்ளது.

திரள் கூட்டமான ஜனங்களும் அவருக் காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள்.

இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.

இதோ, மலடிகள் பாக்கியவதிகளென் றும், பிள்ளை பெறாத கர்ப்பங்களும் பால் கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவை

களென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும் (இன்றுள்ள நிலையை யோசித்துப் பாருங்கள். பிள்ளை பெறுதல் அவமான மென்று அவள் நினைக்கிறாள். பாருங் கள்?)

அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள் மேல் விழுங்களென்றும், குன்று களை நோக்கி: எங்களை மறைத்துக் கொள் ளுங்களென்றும் சொல்லத் தொடங்கு வார்கள். பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்ய மாட்டார்கள் என்றார்.

லூக். 23:27-31

86. ஸ்திரீகள் தங்களுக்குப் பிள்ளைகள் வேண்டாம் என்று சொல்லும் காலத்தை இயேசு குறிப்பிடுகிறார். அவர்களுக்கு நாய் அல்லது பூனை அல்லது அப்படி ஏதாவதொன்று போதும், ஆனால் பிள்ளை கள் வேண்டாம். ஏன்? அவள் பிள்ளை பெற்றால், அந்த வயதான தாயாகிய

ஹப்பர்ட் போலாகிவிடுவாள். பாருங்கள்? அவளுக்கு தேவையில்லை ... அதுதான் ஹாலிவுட்டின் குறிப்பு. ஸ்திரீகளுக்கு வயதான தாயாகிய ஹப்பர்டைப் போல் இருக்க விருப்பமில்லை. எனவே அவள் குழந்தை உண்டாகாதபடிக்கு; அவனோ அல்லது அவளோ அறுவை சிகிச்சை செய்து கொள்கின்றனர். அவர்களுக்கு குழந்தைகள் வேண்டவே வேண்டாம்.

87. இயேசு அந்த நாளைக் குறிப் பிட்டார். அவர் என்ன சொன்னார்? "அந்த காலத்தில் அவர்கள் மலைகளையும் குன்று களையும் நோக்கி: எங்கள் மேல் விழுங் கள் என்பார்கள்" என்றார்.

அவள் விருந்துகளுக்குச் செல்ல வேண்டுமென்று கருத்தடை முறைகளைக் கையாளுவாள். குழந்தைக்குப் பால் கொடுக்கவேண்டும் என்னும் தொல்லை அவளுக்கு இருக்கக்கூடாது. அது அவ ளுடைய உடலழகைக் கெடுத்து விடும்.

அவள் கர்ப்பிணியாகிவிட்டால் உருக் குலைந்து விடுவாள். அவள் முன்புபோல் காணமாட்டாள். அவளுடைய கணவனும் அறியாமையின் காரணமாக, அவள் வழியில் செல்ல அனுமதிக்கிறான். அவள் அவனுக்கு ஒரு குழந்தையைப் பெற்றுத்தர மறுக்கிறாள். இயேசு அதை குறிப்பிட்டு, அவர்கள் அப்படி செய்து கொண்டிருக்கும் அந்த நாளில் மலைகள் தங்கள் மேல் விழ வேண்டுமென்று கதறுவார்கள் என்றார். அது கர்த்தருடைய வருகை. அதிகமான பணத்தை பூனைகளுக்கும், நாய்களுக்கும் தாயாக இருப்பதற்கு செலவு செய்வார்கள். அது சரி. அவள் ஏதாவதொன்றிற்கு தாயாக இருக்க வேண்டும். ஏனெனில் அது அவளுக்கு தேவனால் அளிக்கப்பட்ட இயல்பு.

88. நான் கவனித்திருக்கிறேன். நான் பெரிய மிருகங்களை வேட்டையாடுவது வழக்கம். இலையுதிர்காலத்தின்போது, ஒரு பெண் கரடி ஆண் கரடியுடன் சேருகிறது.

அதன் பிறகு அது குட்டிகளை ஈனுகிறது. அதற்கு ஏற்கனவே குட்டிகள் உள்ளன. அவை பருமனான குட்டிகள், ஒவ்வொன்றும் சுமார் நூறு பவுண்டு அல்லது அதற்கும் அதிகமான எடையிருக்கும். பெண் கரடி, அது வேறு குட்டிகளை ஈனும் நேரம் நெருங்கும்போது, ஏற்கனவே வளர்ந்த குட்டிகள் தாங்களே ஓடியாடவும் படுத்துக் கிடக்கவும் அவைகளைப் பழக்குவிக்கிறது. கரடி குட்டிகள் ஈனும் மாதம் பிப்ரவரி. அது பிப்ரவரி மாதம் என்று தாய்க் கரடிக்கு தெரியவே தெரியாது. அது குட்டிகளை சிறுசாக்குகளில் ஈனுகின்றது. இந்த சிறு சாக்குகள் எப்படி தானாகவே திறக்கும்படி தேவன் செய்தார்! அவை காண்பதற்கு 'செலோபோன்' (Cellophone) சாக்குகள் போன்றுள்ளன. இந்த குட்டிகள் வழி கண்டு பிடித்து வருகின்றன. தாய்க் கரடி நன்றாக உறங்கிக் கொண்டிருக்கும். அது அக்டோபர் மாதத்திலிருந்து ஒன்றும் சாப்பிடுவதில்லை. அது பிப்ரவரி மாதம்.

குட்டிகள் தாயிடம் வந்து மே மாதம் நடுவில் வரைக்கும் பால் குடிக்கும். குட்டிகள் பால் குடித்து நன்றாக வளரு வதை தாய் கரடி காண்கிறது. அவை ஒவ்வொன்றும் பத்து அல்லது பதினைந்து பவுண்டு எடையிருக்கும். ஆகாரம் உண்ணாமல் தாய்க்கரடிக்கு பால் எப்படி உண்டாகிறதென்பது தேவனுடைய திட்ட மாகும். அது தானும் ஜீவித்து அங்கு குட்டிகளுக்கு பாலை உற்பத்தி செய்து தருகிறது. அந்த ஈனும் காலத்தில், அதற்கு குட்டிகள் உண்டாகாமல் போனால்... அது சென்ற ஆண்டு ஈன்ற கரடிக் குட்டிகளைத் தேடிப் பிடித்து, கோடை காலம் முழுவதும் அவைகளுக்குப் பால் கொடுக்கிறது. அது தேவனால் அதற்கு அளிக்கப்பட்ட இயல்பு. அது எதற்காவது பால் கொடுக்க வேண்டும்.

89. ஒரு ஸ்திரீக்கு தன் கணவனுக்குப் பிள்ளை பெற்றுத்தர பிரியமில்லாதிருந் தால், அவள் நாய் அல்லது பூனை ஏதாவ

தொன்றை தாயைப் போல் வளர்க்க வேண்டும். அது பெண் களின் இயல்பு. ஆனால் தன் கணவனுக்குப் பிள்ளைப் பெற்று தேவனுடைய சேவைக்கென்று வளர்ப்பதென்பது அவளுடைய கருத்துக்கு முற்றிலும் அப்பாற்பட்டது. அவள் அப்படி செய்ய நேர்ந்தால், 1965ம் ஆண்டில் இவ்வகை பெண்களைக் கொண்ட பாவத்தை சிநேகிக்கும் சமுதாயம் அவளை இழிவாகக் கருதும்.

---

❺

**செய்தி: 63-03-23 ஆறாம் முத்திரை**

347 "ஆனால் இப்பூமியை நாசம் செய்பவர்களை தேவன் நாசம் செய்யும் நேரம் வந்துள்ளது" என்று வேதம் கூறு கின்றது என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். முழு-உலகமும்!

348 அன்றொருநள் நானும் என் மனைவியும் தெற்கு மலையின் மேலேறி, பீனிக்ஸ் பள்ளத்தாக்கை நோக்கினோம். என் மனைவிடம் நான், “இது மோசமாகக் காணப்படுகின்றதல்லவா?” என்றேன்.

அதற்கு அவள், "மோசமாகவா? எனக்குப் புரியவில்லையே” என்றாள்.

349 நான் மேலும் விவரித்து அவளிடம், “இந்த ஸ்தலம் பாவத்தால் நிறைந்திருக்கின்றது. 1,50,000 அல்லது 2,00,000 ஜனத்தொகை கொண்ட இப்பள்ளத்தாக்கில் எவ்வளவாக விபச்சாரமும், மது அருந்துதலும், சபித்தலும் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவதும் நிறைந்துள்ளது!”

350 “ஐந்நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் இங்கு முட்செடிகளும், புல் செடிகளும் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. நதியின் மணலில் ஓநாய்கள் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்

தன. அவ்வாறே தேவன் அதை சிருஷ்டித்தார்” என்றேன்.

351 ஆனால் மனிதன் அங்கு புகுந்தவுடன் என்ன செய்தான்? அவன் பூமியை அசுத்தத்தால் நிரப்பினான், தெருக்களும், நதிகளும் அசுத்தமாக்கப்பட்டுவிட்டன. அங்குள்ள தண்ணீரைக் குடித்தால் உங்களுக்கு எந்த வியாதியும் வரக்கூடும். பாருங்கள்? அதைப் பாருங்கள்? இங்கு மாத்திரமல்ல, உலகம் முழுவது இந்நிலையில் உள்ளது. எல்லாமே மாசுபட்டு தூய்மைக் கேடாக உள்ளது.

352 இயற்கையும் பூமியில் அசுசிப்பட்டுள்ளன. (தேவனே கிருபையாயிரும்!) உலகம் முழுவது பிரசவவேதனையிலுள்ளதாக ஏசாயா கூறியிருக்கிறான். என்ன காரணம்? அவள் ஆயிரம் வருட அரசாட்சிக்கென்று புது உலகத்தைப் பிரசவிக்க முற்படுகிறாள். அந்த உலகம் பாவமற சுத்திகரிக்கப்பட்டிருக்கும். அங்கு

புதிய ஜனங்கள் வாழ்வார்கள். அது உண்மை. அவர்கள் பாவம் செய்து பூமியை ஒருபோதும் அசுத்தப்படுத்தமாட்டார்கள். அது சரி. உலகம் பிரசவவேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாமும் மணவாட்டியை உருவாக்குவதற்கென பிரசவ வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

எல்லாமே பிரசவவேதனையடைந்து வேதனை மிகுதியால் அலறிக்கொண்டிருக்கிறது. பாருங்கள், ஏதோ ஒன்று சம்பவிக்க இருக்கிறது என்பதனை இது காண்பிக்கிறது.

353 ஆகவே இந்த ஆறாம் வாதையின் சம்பங்கள் புதிய உலகத்தை உருவாக்குகின்றது. சகோதரனே, பூமியதிர்ச்சியினால் பூமி பிளவுண்டுபோகும், நட்சத்திரங்கள் குலுக்கப்படும், எரிமலைக் குழம்பு பூமியின் மையத்திலிருந்து மேற்பரப்புக்கு வரும். பூமி இவ்விதம் புதுப்பிக்கப்படும்,

பூமி சுற்றிக்கொண்டு வரும்போது, எல் லாமே தவிடு பொடியாகிவிடும்.

354 ஒருநாள் காலையில் இயேசுவும் அவரது மணவாட்டியும் பூமிக்குத் திரும்ப வரும்போது, இது தேவனுடைய பரதீசி யாக அமைந்திருக்கும். அது, ஓ, என்னே! ஆவிக்குரிய போரில் கலந்துகொண்ட வீரர்கள் அவர்களுக்கு அருமையானவர்க ளுடனும் நண்பர்களுடனும் இங்குமங்கும் உலாவுவர். பரம் சேனையின் தூதர்கள் இசைக்கும் பாட்டுகள் ஆகாயத்தை நிரப்பும். "ஓ, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உனக்கென்று ஆயத்த மாக்கப்பட்டிருக்கும் உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பாயாக. ஏவாள் பாவம் செய்து அதனை தோற்று விப்பதற்கு முன்பு இவ்வுலகம் இவ்வாறே இருந்தது” என்பார். ஆமென். வ்யூ! ஆம்.

355 ஆறாம் முத்திரை ஏதோ ஒன்றை செய்யப்போகின்றது. ஆம் ஐயா! முழு

உலகமே ஆயிரம் வருஷ அரசாட்சிக்காக பிரசவ வேதனைப்பட்டு அலறிக்கொண் டிருக்கிறது.

356 ஆனால் இப்போதைய உலகம் அசுத்தத்தினால் நிறைந்துள்ளது! சில நாட்களுக்கு முன்பு இக்கூடாரத்தில் உலகம் விழுந்து போதல் என்பதைக் குறித்து பிரசங்கித்தது நினைவுக்கு வருகின்றது. அது முற்றிலும் சரியாகும். உலகத்தில் விழுந்து போகின்றது. எதனால் என்று பாருங்கள், அனைத்துமே அழித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வுலகில் எல்லாமே இடிந்துபோக வேண்டும். ஆம் ஐயா.

357 பாருங்கள், அதனுடைய வெளிப் புறம்! உலகம் அந்தவிதமான நிலையைப் பெற்றுள்ளதற்கான காரணத்தை நான் உங்களுக்கு காண்பிக்கட்டும். இப்பூமிக்கு வெளிப்புற ஆதாரமாக (Frame) அமைந் துள்ள இரும்பையும் செம்பையும் உலோ

கங்களையும் அவர்கள் தொழிற்துறைகளுக் காகவும் யுத்தத்தில் உபயோகிப்பதற்காக வும் வெட்டி எடுக்கின்றனர். சம்பத்தில் செயிண்ட் லூயி (St.Louis) போன்ற இடங்களில் பூகம்பம் உண்டானது. இதற்கு முன்பாக பூகம்பம் அங்கு உண்டாக வில்லை. ஏன்? இவ்வுலோகங்கள் வெட்டி எடுக்கப்படுவதால் அவள் மெலிந்து கொண்டே போகின்றாள். எல்லாவற்றை யும் அங்கிருந்து அவர்கள் வெட்டி எடுத்துவிட்டனர். பாருங்கள்?

358 அரசியலும் கறைப்பட்டு விட்ட தால், உத்தமமான யாரையும் அதில் காண்பது அரிதாயிருக்கிறது. அவர்களின் நல்லொழுக்கம் மிகவும் கீழ்த்தரமான நிலையை அடைந்துள்ளது. அவ்வளவே தான். பாருங்கள்? நிச்சயமாக, அதனுடைய மதவழிபாடு அரிக்கப்பட்டுள்ளது. ஆம் ஐயா!

359 வெகுவிரைவில் ஆறாம் முத்திரையில் கூறியுள்ள சம்பவங்கள் நிகழவிருக்கின்றன. அவை நிகழும்போது அதுதான் முடிவு. அப்பொழுது ஏற்கனவே மணவாட்டி எடுக்கப்பட்டிருப்பாள். அரசி அவள் ஸ்தானத்தை வகித்து ஏற்கனவே சென்றிருப்பாள். அவள் ராஜாவை மணந்து கொள்ளுவார். இது நிகழும்போது, இஸ்ரவேலில் மீதியானவர்கள் முத்திரிக்கப்பட்டுச் செல்ல ஆயத்தமாயிருப்பார்கள். அவ்வமயம் இயற்கையும் தன் கிரியைகளைச் செய்கிறது. ஓ, என்னே ஒரு சமயம்!

360 ஆறாம் முத்திரையை விவரிக்கும் பாகத்தின் கடைசி வசனத்தைக் கவனியுங்கள், அடையாளங்களால் உறுதியாக்கப்பட்ட ஜீவனுள்ள தேவனின் வார்த்தையைக் கேட்டு பரியாசம் செய்தவர் யாவரும். சூரியனையும், மற்றவைகளையும் அடைத்த தீர்க்கதரிசிகள் காலங்கள் தோறும் செய்துவந்த அற்புதங்களைக் கண்டு நகைத்தவர் யாவரும் ஆறாம்

முத்திரையின்போது, "பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி, ஆட்டுக்குட்டி யானவருடைய கோபத்துக்கு எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல் வார்கள். ஏன்? அவர்கள் பரிகசித்த அதே வார்த்தையாகிய கிறிஸ்து வருகிறதை அவர்கள் காண்கின்றனர். பாருங்கள் அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கண்டு நகைத்தனர். அதே வார்த்தைதான் மாம்சத்தில் வெளிப்பட்டது. அதை அவர் கள் பரிகசித்தனர். தேவனுடைய வார்த் தையை ஏற்றுக்கொண்ட அனைவரையும் அவர்கள் பரிகசித்தனர். மாம்சமான அந்த வார்த்தை அவர்கள் மத்தியில் வந்தது.

361 அவர்கள் ஏன் மனந்திரும்ப முடியாமற் போனார்கள்? ஏனெனில் கால தாமதமாகிவிட்டது. ஆதலால் அவர்கள் மேல் தண்டனை விழப்போகின்றது என்பதை அவர்கள் அறிந்துகொண்டனர். இத்தகைய ஆவிக்குரிய கூட்டங்களில் அவர்கள் பங்குகொண்டு பிரசங்கிக்கப்

பட்ட அனைத்தையும் அறிந்திருந்தனர். தீர்க்கதரிசிகள் முன்னறிவித்துள்ளவை, அவர்கள் புறக்கணித்திருந்த அந்தக் காரியம். அவர்கள் முன்னால் அப்பொழுது நிற்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள். கிருபையை அவர்கள் கடைசி முறையாக உதறித்தள்ளிவிட்டனர்.

362 ஆகவே நீங்களும் கிருபையை உதறித்தள்ளினால், நியாயத்தீர்ப்பேயன்றி, வேறொன்றும் விடப்பட்டிருக்கவில்லை. நீ கிருபையை, இரக்கத்தை உதறித்தள்ளி னால், அதை சற்று சிந்தனை செய்து பாருங்கள்.

363 தண்டனை வரும்போது அவர்கள் ஒளிந்துகொள்ள இடமில்லாமற்போகும். அவர்கள் பர்வதங்களையும் கன்மலை களையும் நோக்கி, “எங்கள் மேல் விழுந்து ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்துக்கு எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்” என்று கூறுவார்கள் என்பதாக வேதம் எடுத்துரைக்

கிறது. அவர்கள் மனந்திரும்ப முயன்றனர். ஆனால் ஏற்கனவே ஆட்டுக்குட்டியானவர் வந்து தமக்குச் சொந்தமானவர்களைக் கொண்டு சென்றுவிட்டனர். அவர்கள் பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி கெஞ்சினர். ஜெபம் செய்தனர். ஆனால் அப்பொழுது அந்த ஜெபங்கள் மிகவும் காலம் கடந்து ஏறெடுக்கப்பட்ட தாயிருந்தன.

364 என் சகோதரரே, சகோதரிகளே, தேவனுடைய கிருபையும் இரக்கங்களும் ஜனங்களுக்கு இப்பொழுது அளிக்கப்பட் டுள்ளன. நாம் மனந்திரும்பத் தருணம் அளிக்கப்பட வேண்டும் என்பதற்காக இரண்டாயிரம் ஆண்டுகளாக இஸ்ரவேல ரின் கண்கள் குருடாக்கப்பட்டுள்ளன. இத்தகைய இரக்கத்தை நீ உதறித் தள்ளிவிட்டாயா? நீ அவ்விதம் செய் தாயா? அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டாயா?

365 நீங்கள் யாராயிருக்கிறீர்கள்? நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்? நீங்கள் எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள்? உங்களால் இவைகளை எந்த வைத்தியரிடத்தில் கேட்க முடியாது. நீங்கள் உலகத்தில் வேறெந்த நபரிடத்தில் கேட்டறிந்து கொள்ள முடியாது. இந்த புஸ்தகத்தைத் தவிர வேறெந்த புஸ்தகத்திலும் நீங்கள் யாரென்றும், நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்றும், எங்கு போகின்றீர்கள் என்பதையும் படித்து உங்களால் அறிந்துகொள்ள முடியாது.

366 இப்பொழுது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் உங்களுக்குப் பதிலாக உங்கள் ஸ்தானத்திலிருந்து கிரியை செய்யாவிட்டால் நீங்கள் எங்கு எதிர்நோக்கிச் செல்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. ஆகவே, தேவன் உங்களுக்காக இதைச் செய்திருக்கும்போது, நாம் செய்ய வேண்டிய சிறிய காரியம் அவர் நமக்கென செய்திருப்பதை ஏற்றுக் கொள்வதாகும்.

அதை நாம் செய்ய வேண்டுமென்று அவர் நம்மிடம் கூறியுள்ளார்.

---

❻

**செய்தி: 65-08-15 இதை அறியாமலிருக்கிறாய்**

31. லவோதிக்கேயா சபையையும் அதன் இன்றைய நிலையையும் சற்று சிந்தித்து பார்ப்போம். எனக்குத் தெரிந்த மட்டில், சபை அதற்கென்று ஆயத்தப்படு வதைத் தவிர்த்து கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கு இந்நேரத்தில் தடையாயுள்ள வேறொன்றுமே இல்லை எனலாம்.

32. நேற்று நான் காரில் வந்து கொண்டிருந்தபோது.. நானும் பில்லியும் இரண்டாயிரம் மைல் தொலைவிலிருக்கும் டூசானிலிருந்து காரோட்டி இரண்டு நாட் களில் இங்கு வந்து சேர்ந்து விட்டோம். நாங்கள் எந்த வேகக் கட்டுப்பாட்டு

சட்டங்களையும் மீறி அப்படி செய்ய வில்லை. நாங்கள் அந்த கட்டுக்குள் ளேயே... பில்லி காரோட்டும்போது நான் உட்கார்ந்து கொண்டிருப்பேன்... அவன் வேகமாய் ஓட்டுவதைக் காணும் போது... நான். "டேய்! சற்று பொறு. மெல்லச் செல்" என்பேன். இராயனுடையதை இராயனுக் குச் செலுத்த வேண்டுமென்று நமக்கு கூறப்பட்டுள்ளது. (மத். 22 : 21)

33. சென்ற இரவு நாங்கள் காரோட்டி இங்கு வந்து கொண்டிருந்தபோது... ஏறக் குறைய 3 வயதுள்ள ஒரு சிறு பெண் சாலையில் விகாரமான நிலையில் மரித்து கிடந்திருந்தாள். அவளுடைய தாய் குழியில் சவமாகக் கிடந்தாள். இராணுவத் தில் பணிபுரியும் 18 வயது கொண்ட ஒருவன் நன்றாக குடித்து விட்டு மணிக்கு 120 மைல் வேகத்தில் சாலையின் இடது புறத்தில் காரோட்டி வந்ததனால் விளைந்த விபத்து இது. அவனுடைய உயிரும் ஊசலாடிக் கொண்டிருந்ததென்று எண்ணு

கிறேன். அது எப்படி யிருந்திருக்குமென்று எண்ணிப் பாருங்கள், "இராயனுடையதை இராயனுக்கு செலுத்துங்கள்".

34. அப்பாவிகள் விபத்துக்குள்ளாகி மரிக்கின்றனர். 3 வயதுள்ள சிறுமி ஒருத்தி, குடித்து வெறித்திருந்த ஏதோ ஒரு இராணுவ வீரன். சாலையின் தவறான பக்கத்தில் மணிக்கு 120 மைல் வேகத்தில் காரோட்டி வந்ததன் விளைவாக உயிரிழந் தாள். அவன் மலையின் மேல் வந்து கொண்டிருந்த போது, அவர்களை இடித்து வீழ்த்தி கொன்று போட்டான். அவனும் மரணத்தருவாயிலிருந்தான். பாருங்கள், குற்றமில்லாதவர்கள் இப்படியாக

35. அந்த பையன் கொடூர கொலை யைச் செய்த குற்றத்துக்கு ஆளானான். ஒரு மனிதன் குடித்திருந்த நிலையில் சாலையில் அகப்பட்டால், முன்திட்டமிட்டு செய்த கொலைக்காக அவனுக்கு- அது எந்த

மனிதனாயிருந்தாலும்-10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படவேண்டும்.

36. இந்த அரசியலினால் நமக்கு ஒரு உபயோகமுமில்லை. அது அழுகிப் போனது. ஒரு நீதியுள்ள ராஜா ஆள வேண்டுமெனும் தேவனுடைய கருத்து மாத்திரமே சரியானது. அரசியல் எங்கும் பரந்துள்ளது. அதை நீங்கள் விலைக்கு வாங்கி விடலாம், மோசடி, ஏமாற்றுதல், களவாடுதல், எல்லாமே, சில வாரங்க ளுக்கு முன்பு ஒரு ஞாயிறன்று நான் கூறினது போன்று, நாம் எந்நிலையிலுள் ளோம் என்பதை பாருங்கள். பாருங்கள், இவை அனைத்தும் நேர்மையற்றவைகளே யன்றி வேறொன்றுமல்ல. நீதியுள்ள ஒரு ராஜா தன் சொந்த சட்டங்களை உண் டாக்குவான். இன்று நீங்கள் ஒரு மனி தனைக் கொன்று விட்டு, அரசியல் செல்வாக்கு படைத்தவர்களாயிருந்தால், தப்பித்துக்கொள்ளமுடியும். ஜனநாயகம் ஒரு நல்ல கருத்துதான், ஆனால் அது

கிரியை செய்யாது. உதாரணமாக எல்லாவற்றையும் பொதுவாக அனுபவிக்கும் கம்யூனிஸக் கொள்கையும் நல்லது தான். ஆனால் அது கிரியை செய்யாது. தாவீதைப் போன்று, ஒரு ராஜாவை ஏற்படுத்தும் தேவனுடைய முறையே சரியானது. உங்கள் மனதை அதிலே மையமிட்டு.... ஒரு கூட்டம் வாத்துக்கள் ஒரே ஒரு தலைவனைப் பெற்றுள்ளது போல. நீங்கள் 2 அல்லது 3 பேர்களை தலைவராகப் பெற்றிருக்க முடியாது. அப்பொழுது நீங்கள் எல்லாவற்றையும் குழப்பி, முடிவில் ஏதோ ஒரு விதமான கருத்தை உடையவர்களாயிருப்பீர்கள். எனவே இன்றைய நிலை கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாயுள்ளதாக நாம் காண்கிறோம்.

37. சகோ. நெவிலும், இந்த மற்ற சகோதரர்களும் ஒரு மந்தையை மேய்க்க முயன்றுவரும் இந்நேரத்தில் என் மனதில் ஒன்று எழுந்துள்ளது. அதைக் குறித்து இப்பொழுது நாம் பேசுவோம். அதாவது,

ஒரு அருமையான ஸ்திரீயிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அது எனக்கு நேரடியாக வர வில்லை, வேறொருவர் மூலம் எனக்குக் கிடைத்தது. அவள் என்னைக் கண்டனம் செய்ய முயன்றாள். அவள், "நீங்கள் எப்பொழுதாவது, கிறிஸ் தவ வர்த்தகர்களாகிய நீங்கள் சகோ. பிரான்ஹாம் பிரசங்கிப்பதை நிறுத்த ஏதாவதொன்றை செய்யக்கூடாதா? அவர் 'லவோதிக்கேயா சபை' என்னும் தலைப்பு கொண்ட புத்தகத்தை வெளியிட்டுள்ளார். இன்னும் வேறு புத்தகங்களை வெளியிடப் போகின்றார். அவர் பெந்தெகொஸ்தே உபதேசத்தை சுக்குநூறாக உடைத்தெறி கிறார். அந்நிய பாஷை பேசுதல் ஆவி யைப் பெற்றதன் ஆரம்ப அடையாளமல்ல என்று அவர் விவாதிக்கிறார். அவர் பெண் பிரசங்கிகளுக்கு விரோதமானவர்" என்று எழுதியிருந்தாள் (இவள் ஒரு பெண் பிரசங்கி)..

38. அவளுடைய மகன்கள், உலகி லேயே எனக்கு தலை சிறந்த நண்பர்கள்.

39. இந்த கடிதத்தைப் பெற்ற மனித னுடனும் அவருடைய மனைவியுடனும் நான் காலை உணவு அருந்திக் கொண் டிருந்தேன். அப்பொழுது அவர் மனைவி, "சகோ. பிரான்ஹாமே இதை பாருங்கள், இதைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?" என்று சொல்லி கடிதத்தை வெளியே எடுத்து காண்பித்தாள்.

நான், "நல்லது. சகோதரியே அவளுக்கு புரியவில்லை" என்றேன்.

40. அவர்களின் தாய் ஒரு பெண் பிரசங்கியென்று இந்த பையன்கள் என்னிடம் கூறியுள்ளனர். அந்த கடிதத்தில், “ஸ்திரீகள் புருஷர்களின் மேல் அதிகாரஞ் செலுத்தக்கூடாது (1தீமோ.2.12) என்றால், வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பவுலுக்கு ஆதரவாயிருந்த பெபேயாளைக் குறித்

தென்ன? (ரோமர் 16.1)" என்று கேட்டிருந்தாள்.

41. நிச்சயமாக அவள் சரக்குகளை விற்பவள். பவுல் ஜனங்களைக் கேட்டுக் கொண்டான்... "ஸ்திரீகள் சபையில் அமைதலாயிருக்க வேண்டும்" என்று பவுல் கூறிவிட்டு, அவர்கள் பேசுவதற்கு அனுமதி கொடுக்காமல், உடனே மறு பக்கம் திரும்பி, "சுவிசேஷத்தில் எனக்கு ஆதரவாயிருக்கிற பெபேயாள் சில இரவுகள் பிரசங்கம் செய்வாள்' என்று கூறியிருப்பான் என்று நினைக்கிறீர்களா? அவன் தான் கூறின வார்த்தைக்கே முரணாக செயல்பட்டதாக ஆகிவிடுமே.

42. அவள் அந்த கடிதத்தில், "இவையனைத்துக்கும் மேலாக, ஒரு ஸ்திரீ வேதாகம காலத்தில் நியாயாதிபதியாக இருந்திருக்கிறாள். (அது எஸ்தர் என்று நினைக்கிறேன்) அது புருஷரின் மேல்

அதிகாரஞ் செலுத்தும் பணி இல்லை யென்றால்..." என்று எழுதியிருந்தாள்.

43. அண்மையில் இந்த சபை கட்டிடத்தில் சுகம் பெற்ற ஒரு வர்த்தகரின் மனைவி என்னிடம், "சகோ.பிரான்ஹாமே, அது எப்பொழுதுமே எனக்குப் புதிராக இருந்து வந்துள்ளது" என்றாள்.

நான், "ஏன், சகோதரியே, அது ஏன் புதிராக இருக்க வேண்டும்?' என்றேன்.

அவள், "பெண் நியாயாதிபதி ஒருவள் இருந்திருக்கிறாளே" என்றாள்.

44. நான், "அது அரசியல், சபையல்ல. அதற்கும் சபைக்கும் எவ்வித தொடர்பு மில்லை. பவுல், “நியாயப்பிரமாணம் கூறியுள்ளபடியும் அது கீழ்ப்படிந்திருக்க வேண்டும்" என்றான். நியாயப்பிரமாணம் ஒரு ஸ்திரீயை ஆசரியனாக செய்ய முடியாது. ஒரு பெண் பிரதான ஆசாரி யனை நீங்கள் கண்டதில்லை. ஒரு பெண் ஆசாரியனையும் நீங்கள் கண்டதில்லை

வேதத்தில் எங்குமே கூறப்படவில்லை. ஒரு பெண் பிரசங்கியையும் நீங்கள் வேதத்தில் காணமுடியாது. நிச்சயமாக, அவர்களில் சிலர் தீர்க்கதரிசினிகளும், அது போன்று ஏதாவ தொன்றாக இருந்தனர். மிரியாமும் மற்றவர்களும், எஸ்தர் இஸ்ர வேல் ஜனங்களின் மேல் நியாயாதிபதி யாக இருந்தாள்.

(அது தெபொராள்-நியா.4.4, தமிழாக் கியோன்) சில சமயங்களில் அவர்கள் இராணிகளாக அவர்களை ஆண்டனர்-ராஜா, ராணிகள். ராஜா மரித்தபோது, வேறொரு ராஜா நியமிக்கப்படும் வரைக் கும் ராணி அந்த ஸ்தானத்தில் அமர்த்தப் பட வேண்டியதாயிருந்தது.

45. அரிசோனாவிலுள்ள டூசானில், ஒரு பெண் நியாயாதிபதி நகரத்தில் எங்களுக் குண்டு. அதன் காரணமாக நகரம் மாசு பட்டுள்ளது. ஒரு ஸ்திரீக்கு அரசியலில் எந்த வேலையும் கிடையாது. அவளுக்கு

சபையால் எந்த வேலையோ அதிகாரமோ கிடையாது. அவளுக்குள்ள இடம் மனிதனின் ராணி என்னும் முறையில் வீடு மாத்திரமே. அதற்கு வெளியில் அவளுக்கு ஒன்றுமேயில்லை. அது உண்மையென்று நாமறிவோம். நீங்கள் எங்குமே காண முடியாது. அது பழமை நாகரீகங்கொண்டதாய் ஒலிக்கலாம். ஆனால் அதற்கு நான் பொறுப்பு.

46. இவ்வுலகை விட்டு நான் கடந்து சென்ற பிறகு இந்த ஒலி நாடாக்களும் புத்தகங்களும் நிலைத்திருக்குமென்று நானறிவேன். இப்பொழுது சிறுவர்களாக உள்ள உங்களில் அநேகர் இது முற்றிலும் உண்மையென்பதை வரப்போகும் நாட்களில் அறிந்து கொள்வீர்கள். ஏனெனில் நான் கர்த்தருடைய நாமத்தினால் இதை உரைக்கிறேன்.

47. அப்படிப்பட்ட ஒரு ஸ்திரீ, ஒரு நல்ல ஸ்திரீ-விசுவாசமுள்ள, நல்ல தன்

கணவனின் மூலம் நான் இதுவரை சந்தித் ததில் மிகவும் அருமையான பையன்களை எவ்வாறு இவ் வுலகில் பெற்றெடுக்க முடிந்தது என்று எனக்கு வியப்பு தோன்று கிறது. அந்த பையன்கள் ஆண்மையுள்ள வர்கள். அவர்கள் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் நூறு சதவிகிதம் அதை ஏற்றுக் கொண்டனர். அது முன்குறித்தலின் மூலம் மாத்திரமே நிகழக்கூடும். அந்த ஒரு வழியில் மாத்திரமே அது நேரிட முடியும்.

48. இங்குள்ள கேள்வி என்னவென் றால், நான் நினைத்துக் கொண்டிருந்தேன். பாருங்கள். கர்த்தர் என்னை மீண்டும், "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப் படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாம லிருக்கிறாய்" என்பதற்கு கொண்டு வந்து விட்டார்.

49. அதற்கு நான் செல்வதற்கு முன்பு, சில நாட்களுக்கு முன்பு நான் அளித்த-

அது இப்பிரபஞ்சத்தின் தேவன்" என்று நினைக்கிறேன்-செய்தியின் சுருக்கத்தை கூறப்போகின்றேன். அவன் மக்களின் கண்களைக் குருடாக்கிப் போட்ட காரணத் தால், அவர்கள் தங்கள் மதசம்பந்தமான ஆராதனைகளில் பிசாசை முற்றிலுமாக தொழுது கொள்கின்றனர். நீங்கள் அனை வரும் அதை கிரகித்துக் கொண்டீர்களா- உங்கள் எல்லோருக்கும் அது புரிகின்றதா?

50. அதே செய்தியில் நான், நடத்தை கெட்ட உடைகளை நாணயமின்றி உடுக் கும் எந்த பெண்ணும் நியாயத்தீர்ப்பின் போது தெருவிலுள்ள வேசியாக கருதப் பட்டு நியாயத்தீர்க்கப்படுவாளென்று கூறினேன்.

51. ஒரு சிறு காட்சியை உதாரணமாக உரைக்க விரும்புகிறேன். நகரத்தில் ஒரு இளைய வழக்கறிஞர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அரசியலைப் பொறுத்தவரையில் அவர் மிகவும்

நல்லவர். அரசியலில் அவர் ஒருக்கால் நாணயமாக நடந்து கொள்ளக்கூடும். பிறகு அவர் பிரபலமான ஒரு பெண்ணுடன் வெளியே செல்கிறார். அவர்களிருவருக்கு மிடையே காதல் ஏற்பட்டு மணந்து கொள் கின்றனர். அவர்கள் எல்லா விருந்துக ளுக்கும் சென்று ஒன்று சேர்ந்து குடிக்கின் றனர். அவள் ஒரு நல்ல குடும்பத்தை சேர்ந்தவள், அவர் அண்டை வீட்டில் தங்கியிருக்கிறார். ஜனங்கள் அவரை வெகுவாக மதிக்கின்றனர், ஆனால் அவர்... இருவருமே குடிக்கின்றனர். அவள் குட்டை கால் சட்டை அணிந்து, தலைமயிரை கத்தரித்துக் கொண்டு, அழகு படுத்தும் சாதனங்களை உபயோகிக்கிறாள், மிகவும் கவர்ச்சியாய்... அழகான பெண் - தன்னை இவ்வாறு காண்பிக்கிறாள்.

52. அவள் சபைக்குச் செல்வதே யில்லை-இருவருமே. அவர்களுடைய அடுத்த வீட்டுக்கு பாப்டிஸ்டு சபை அல்லது மெதோடிஸ்டு சபையைச் சேர்ந்த

ஒரு பெண் குடிவருகிறாள்- அவளும் அவளுடைய கணவனும். இந்த பெண் (அவள் மெதோடிஸ்டு' என்று வைத்துக் கொள்வோம். ஏனெனில் மெதோடிஸ்டு பாப்டிஸ்டைக் காட்டிலும் புதிய ஏற்பாட்டு பாப்டிஸ்டைத் தவிர-அதிகம் பரிசுத்தத் தைக் கடைபிடிப்பவர்கள். அவர்கள் பரிசுத்தத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். பாப்டிஸ்டுகள் வழக்கமாக பரிசுத்தத்தை கடைபிடிப்பதில்லை, ஏனெனில் அவர்க ளுக்கு அதில் நம்பிக்கை கிடையாது. எனவே இந்த பெண் மெதோடிஸ்டு என்று வைத்துக் கொள்வோம். ஏனெனில் அவர்கள் பரிசுத்தத்தில் நம்பிக்கை கொண் டவர்கள்).

53. ஒரு மெதோடிஸ்டு பெண் அதே தெருவில், மற்ற பெண் வாழ்ந்து கொண் டிருக்கும் வீட்டுக்கு பக்கத்து வீட்டில் குடிவருகிறாள். வழக்கறிஞர்-அவருடைய பெயர் ஜான் -ஊரை விட்டு வெளியே சென்றுள்ள சமயத்தில், இந்த மெதோ

டிஸ்டு பெண் மற்ற பெண்ணிடம் வருகிறாள். நான் ஜான் என்று கூறினது புனைப்பெயரே. அதை வைத்துக்கொண்டு ஊகிக்கத் தொடங்கிவிடாதீர்கள். இந்த பெண் வழக்கறிஞரை மணம் புரிவதற்கு முன்பு ரால்ஃப் என்பவனுடன் சென்று கொண்டிருந்தாள் (அதுவும் புனைப் பெயரே-இவையனைத்தும், பாருங்கள், இந்த கதையை நீங்கள் புரிந்து கொள்ளவே இவை கூறப்படு கின்றன).

54. முதலாவதாக, குடிக்கும் விருந்து ஒன்றில் ரால்ஃப் அவளைக் கட்டித் தழுவுகிறான். அவளுக்கு அனல் உண்டா கின்றது. அவள் மறுபடியும் ரால்ஃபுடன் காதல் கொள்கிறாள். சிறிது கழிந்து ரால்ஃப் அவளை சந்திக்கத் தொடங்குகிறான். அவள் அதை ஜானுக்கு மறைத்து விடுகி றாள். அவள் மிகவும் சாமர்த்தியமுள் ளவள் என்பதால், அவள் ஜானை மணந் திருந்தாலும், அவர் கண்களுக்கு இதை

மறைத்து, ரால்ஃபுடன் பழகலாம் என்று அவள் எண்ணுகிறாள்.

55. பாருங்கள், இந்த பெண்ணுக்கு கொஞ்சம் கூட நாணயம் இல்லை. அதெல்லாம் பரவாயில்லையென்று அவள் எண்ணுகிறாள்.

56. இந்த மெதோடிஸ்டு பெண்ணோ வேறு வழியில் வளர்க்கப்பட்டவள். அவள் சபைக்காகிலும் செல்கிறாள். அந்த பெண் மோசமானவள் என்று அவள் எண்ணி னாள். அவளுடைய கணவர் திரும்பி வந்தவுடன் அவள், "பாருங்கள், ஜான் வழக்கு விஷயமாக பிலதெல்பியா மற்றும் வேறு இடங்களுக்கு சென் றுள்ள போது, இவன் வந்து அவளை சந்திப்பதைக் காண்கி றேன். அவன் அவளைக் காரில் கொண்டு செல்கிறான். அவர்கள் இருவ ரும் கடற்கரையில் படுத்துக்கிடக்கின்றனர். அவர்கள் வீடு திரும்பின பிறகு, சில சமயங்களில் திரையையும் கூட இழுத்து

மூடாமல் அவன் அவளுக்கு முத்தம் கொடுத்து காதல் பண்ணுகிறான். அது பயங்கரமல்லவா? அவள் வேசியேயன்றி வேறொன்றுமல்ல" என்கிறாள்.

57. அது உண்மை . அவள் வேசியைக் காட்டிலும் மோசமானவள், ஏனெனில் அவள் விவாகமானவள். பாருங்கள்? இந்த பெண், மெதோடிஸ்டு பெண், அது பயங்கரம் என்று எண்ணுகிறாள். மற்ற பெண் சபைக்கு செல்வதேயில்லை.

58. இந்த மெதோடிஸ்டு பெண் அத்தகைய செயலைப் புரியமாட்டாள். நிச்சயமாக செய்ய மாட்டாள். அவள் நாணயமானவள். வேறொரு காரியம். அவள் மதுவைத் தொடவே மாட்டாள். ஏனெனில் மெதோடிஸ்டு சபை-அவர்களுடைய திட்டங்களில் 90 சதவிகிதம் மதுவிலக்குக்கே முக்கியத்துவம் அளிக்கின்றது. அவர்களுக்கு மதுவிலக்கு திட்டமொன்று உள்ளது. மெதோடிஸ்டு சபையி

லுள்ள இவர்கள் சபை போதிப்பதைத் தவிர வேறெதையும் கூடுதலாகக் கைக் கொள்வதில்லை.

59. ஆனால் இதே மெலோடிஸ்டு பெண் ஞாயிறு பள்ளி கழிந்த பின்பு ஞாயிறு மாலை வேளையில் தன் கணவருடன் குட்டைகால்சட்டை அணிந்து செல்கிறாள். அவள் தலைமயிரைக் கத்திரித்துக் கொண்டும், உதடு சாயம் பூசிக்கொண்டும், சிறிது புகை பிடிக்கவும் செய்கிறாள்.

60. இப்பொழுது, தேவனுடைய வார்த் தையின்படி, இவ்விருவருமே வேசிகள். ஆனால் இங்குள்ள இவள் நிர்ப்பாக்கிய முள்ளவளாயும், பரிதபிக்கப்படத்தக்கவளா யும், குருடாயும், நிர்வாணயுமாயிருப்பதை அறியாமலிருக்கிறாள். ஒருத்தி மற்றவ ளைப் போலவே குற்றவாளி. ஏனெனில் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற

எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்தாயிற்று (மத்.5, 28).

61. இந்த பெண், "சற்று பொறுங்கள், சகோ. பிரான்ஹாம். நான் வேசியல்ல என்று நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்' என்பாள். என் சகோதரியே, உன்னை வேதாகமத்திற்கு முன்பு கொண்டு நிறுத்தி னால், ஒருக்கால் அதன் மேல் உன் கைகளை தேவனுடைய சமுகத்துக்கு முன்பாக வைத்து, உன் கணவருக்கு நீ உத்தமமாய் வாழ்ந்துவந்தாயென்று நீ ஆணையிடலாம். உன் சரீரம் உன் கணவ ருக்கு சொந்தமானது. உன் ஆத்துமாவோ தேவனுக்குச் சொந்தமானது. ஒரு பொல் லாத ஆவி உன்னை அபிஷேகித்துள்ளது. இல்லையென்றால், உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதென்று என்னால் நிரூபிக்க முடியும்.

62. உன்பாட்டி அப்படிப்பட்ட குட்டை கால்சட்டை உடுத்தி தெருவில் சென்றிருந்

தால், அவர்களுக்கு என்ன நேர்ந்திருக்கும்? அவர்கள் பைத்தியக்கார விடுதியில் கொண்டு போய் சேர்த்திருப்பார்கள்- ஆடையில்லாமல் வெளியே நடந்து சென்றிருந்தால், அவர்களுக்கு புத்தி மாறாட்டம் ஏற்பட்டிருக்கும். அன்று அப்படியிருந்தால், இன்றும் அப்படி இருக்க வேண்டும்.

63. எனவே அது முழு உலகத்தையும் பைத்தியத்தில் ஆழ்த்துகின்றது. முழுவதுமே பைத்தியமாயுள்ளது. அது படிப்படியாக உள்ளே நுழைந்து விட்டது. ஜனங்கள் அதை அறியாமலிருக்கின்றனர்.

64. அவள் ஒரு வேசியா? அவள் தன் சரீரத்தை தன் கணவருக்கு பொருத்தனை செய்த விஷயத்தில் அல்ல, ஆனால் தேவனுக்கு முன்பாக அவள் ஒரு பொல்லாத வேசி ஆவியினால் பீடிக்கப்பட்டு, அது அவளை இவ்வாறு உடுக்கும்படி தூண்டுகிறது. அவள் லவோதிக்கேயா சபையின் காலத்தில் இருந்து

கொண்டு, அவள் அவ்வாறு செய்வதை அறியாமலிருக்கிறாள். குற்றமில்லாத அந்த ஸ்திரீயை தேவன் வேசித்தனக்குற்றத்திற் காக நியாயந்தீர்ப்பார். பார்த்தீர்களா?

65. நீங்கள் அவளிடம் கூறிப்பாருங் கள்! அவளிடம் கூறவே முடியாது. அவளுக்கு இதை எடுத்துக்கூற வழியே யில்லை, 'அவர்கள் நிர்வாணிகளாயிருப் பதை அறியாமலிருக்கின்றனர்" என்று வேதாகமம் கூறுகிறது .

66. நீங்கள் அவளை வேசியென்று தனிப்பட்ட விதத்தில் அழைத்தால், அவள் உங்களை சிறைக்கு அனுப்பிவிடுவாள்- அவள் செய்வாள். நான் யாரைக் குறித்தும் தனிப்பட்ட விதத்தில் பேசுவதில்லை. நான் பாவத்தைக் குறித்து பேசுகிறேன். நான், "இந்த குறிப்பிட்ட சபை, இங்குள்ள திரு. இன்னார், இன்னார், சங்கை இன்னார் இன்னார், அவர் ஒரு ... என்று கூறுவ தில்லை. இல்லை, நான் அப்படி. கூறுவ

தில்லை. அந்த முழு அமைப்பின் உப தேசத்தைக் குறித்தே கூறுகிறேன்... நான் தனிப்பட்ட நபர்களைக் குறிப்பிடுவ தில்லை. அது தனிப்பட்ட நபர்கள் அல்ல, அது அவர்கள் சேர்ந்துள்ள அமைப்பு, அது உலக அமைப்பு.

67. இங்கு உட்கார்ந்திருக்கும் ஜார்ஜ் ரைட், அவருக்கு 75 அல்லது 78 வயதிருக்குமென்று நினைக்கிறேன். அவ ருக்கு மணமாவதற்கு முன்பு அவர் ஒரு நாள் சகோதரி ரைட்டை காணச் சென் றிருந்தபோது, அவர்கள் குட்டை கால் சட்டை அணிந்து நின்று கொண்டிருப் பதைக் கண்டிருந்தால் என்ன செய்திருப் பார்? அவர் அவர்களை ஒருக்காலும்... நீங்கள் அவர்களை சிறையிலடைத்திருப் பீர்கள். நீங்கள் அவர்களை மணந்திருக்க மாட்டீர்கள்.

68. அக்காலத்திலிருந்த எந்த வாலிப னும் அதை தான் செய்திருப்பான், அது தான் நடந்திருக்கும். அது அன்று பாவமும் தவறாயும் இருந்திருக்குமானால், இன்றும் அப்படியே இருக்க வேண்டும். ஆனால் ஜனங்கள் பைத்தியமாக வளர்ந்து விட்டார்கள்.

69. ஒன்றை, அது நிறைவேறுதற்கு முன்பு, உங்களிடம் தீர்க்கதரிசனமாக உரைக்க விரும்புகிறேன். முழு உலகமே பைத்தியம் பிடித்து இருளில் தடுமாறிக் கொண்டிருக்கிறது. அது இன்னும் மோச மாக, மோசமாக, மோசமாக ஆகும். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அது பைத் தியம் பிடித்தவர்களின் கூட்டமாயிருக்கும். இப்பொழுது அது ஏறக்குறைய அந்தவித மாகவேயுள்ளது.

❼

## செய்தி: **62-05-27 கேள்விகளும் பதில்களும் COD #16**

நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? ஆமென்! நீங்கள் அவருக்கு ஊழியம் செய்வீர்களா? ஆமென்! நீங்கள் அவரை விசுவாசிப்பீர்களா? ஆமென்! ஆமென், ஆமென்!

அவர்தான் பிதா. ஆமென்! அவர்தான் குமாரன். ஆமென்! அவர்தான் பரிசுத்த ஆவி. ஆமென்! ஆமென், ஆமென். இன்னும் பாடுங்கள். ஆமென்! ஆமென்! ஆமென்! ஆமென், ஆமென்! நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? ஆமென்! அவர் வருகின்றாரா? ஆமென்! நீங்கள் ஆயத்த மாயிருக்கிறீர்களா? ஆமென்! ஆமென், ஆமென்! இன்றிரவாக இருக்கலாம், நீங்கள் ஆயத்தமா? ஆமென்! காலையாக இருக்க

லாம், நீங்கள் ஆயத்தமா? ஆமென்! எந்நேரமாகவும் இருக்கலாம், நீங்கள் ஆயத்தமா? ஆமென்! ஆமென், ஆமென்! இன்னுமாக பாடுங்கள். ஆமென்! இனனு மாக சத்தமிடுங்கள். ஆமென்! இன்னுமாக ஜெபியுங்கள். ஆமென்! ஆமென், ஆமென்! கர்த்தராகிய இயேசுவே வாரும். ஆமென்! உங்கள் சபையை ஆயத்தப் படுத்துங்கள். ஆமென்! நாம் ஆயத்தமா கின்றோம். ஆமென்! ஆமென், ஆமென்! என் தாயைக் காண விரும்புகிறேன். ஆமென்! என் தந்தையைக் காண விரும்பு கிறேன். ஆமென்! என் இரட்சகரைக் காண விரும்புகிறேன். ஆமென்! ஆமென், ஆமென்! ஓ, நீங்கள் அவரை நேசிக்கி றீர்களா? ஆமென்! நீங்கள் அவருக்கு ஊழியம் செய்வீர்களா? ஆமென்! நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? ஆமென்! ஆமென், ஆமென்!

238. எங்கள் பரலோகப் பிதாவே, இது எங்களுடைய ... ஒரு சிறு ஆமென் பாட்டு ஆகும். உம்முடைய போதனையை நாங்கள் நேசிக்கிறோம், நாங்களெல்லாரும் “ஆமென்” என்று கூறுகிறோம்! ஆவியான வரை நாங்கள் நேசிக்கிறோம், “ஆமென்!” அவர் வருகின்றார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம், “ஆமென்!” கர்த்தாவே, உம்முடைய வேதாகமத்தில் நீர் உரைக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும், நாங்கள் “ஆமென்” என்று அழுத்தமாய்க் கூறுகி றோம். வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த் தையும் நாங்கள் விசுவாசிக்கிறோம். எங்க ளுக்குத் தெரிந்த வரையிலும், வேதத்தி லுள்ள எல்லாவற்றையும் அது எழுதப் பட்ட விதமாகவே, ஒவ்வொரு நிறுத்தற் குறியும், ஒவ்வொரு சிறு கோடும் (hyphen), எங்களுக்கு தெரிந்த வரையிலும் ஒவ்வொரு கால்புள்ளியும் கூட, அது எவ்வாறு எழுதப்பட்டுள்ளதோ அதை

அப்படியே, அவ்விதமாகவே நாங்கள் போதிக்கின்றோம்.

239. ஓ, தேவனே, எங்களை திரும்பக் கொண்டு செல்லும், கர்த்தாவே, வானங்களில் அல்லேலூயா பாடலோடு தூதர்களின் முழக்கங்களோடு வருவதை ஒரு நாளிலே நாங்கள் கேட்போம், அப்போது இயேசு அங்கே தோன்றுவார். அப்போது சபை மேலே எடுத்துக் கொள்ளப்படும் என்று. நாங்கள் பேராவல் கொண்டுள்ள அந்த மகத்தான மனநிறைவு அளிக்கின்ற விருப்பத்தை எங்களுக்குத் தாரும்.

240. அவிசுவாசிகள், “என்ன ஆயிற்று, அந்த மக்களுக்கு என்ன ஆயிற்று? அவர்கள் எங்கே சென்றனர்?” என்று வியப்படைவார்கள். ஓ தேவனே, அவர் கள் அதை புரிந்து கொள்ளமாட்டார்கள். அவரை அவர்கள் காணவும் கூட மாட்

டார்கள். ஆனால் வெளியே அழைக்கப் பட்டவர்கள், தெரிந்து கொள்ளப்பட்ட வர்கள், மறுபடியும் பிறந்தவர்கள் போன் றோர் கொண்ட அவர்கள் காணாமற் போவார்கள். சபையோ அவரைக் காணும். இம்மக்கள் எங்கே சென்று விட்டனரென்று மற்றவர்களுக்குத் தெரியாது. அவர்கள் காணாமல் போய்விட்டனர் என்று மாத் திரமே அறிந்து கொள்வார்கள்; ஆனால் இவர்களோ தங்கள் கர்த்தரோடே இருப் பார்கள்.

241. அந்த நேரத்தில், கர்த்தாவே, இங்கேயே விடப்படுவது இரட்சிப்பின் காலமானது கடந்து சென்று விட்டது என்று அறிந்து கொள்வது பயங்கரமான ஒரு காரியமாக இருக்குமல்லவா? மீட்கப்படு தல் என்பது இனியும் இருக்காது! “அசுத்த மாயிருக் கிறவன் இன்னும் அசுத்தமா யிருக்கட்டும்; பரிசுத்தமில்லாதவன்

இன்னும் பரிசுத்தமில்லாதவனாயிருக்கட்டும்” என்று வேதாகமம் கூறியிருக்கிறது. ஓ, அது எப்படிப்பட்ட ஒரு மணி நேரமாக இருக்கும்!

242. கர்த்தாவே! இப்பொழுது நாங்கள் ஆயத்தமாகட்டும். பிதாவே, உம்மை நாங்கள் சந்திக்க எங்களை நாங்கள் ஆயத்தப் படுத்துவதென்பது, மற்றும் அனுதினமும் எங்கள் இருதயங்களை ஆயத்தப்படுத்துவது என்பது எவ்வளவு அற்புதமான ஒரு சமயமாக இருக்கும் கர்த்தாவே. இன்று இந்த ஏழை ஆத்துமா எழுதிக் கேட்ட இந்த கேள்வியைப் போல், நாங்கள் ஒரு தவறைச் செய்து விழுவோமானால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லா பாவத்தையும் கழுவுகின்றது என்பதை அவர்கள் அறியட்டும். கேள்வியை கேட்ட அந்த நபர் அவ்வாறே செய்ய வேண்டும் என்று கேட்க வில்லை, கர்த்தாவே,

அவர்கள் பசி தாகம் கொண்டு ஆவியானவருடைய ஐக்கியத்துக்குள்ளாக திரும்ப வரும்படிக்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தவே அவர்களை மேலே கொண்டு வாரும். இந்த இருளடைந்த, வருத்தத்தால் நிறைந்த உலகத்திலிருந்து அவர்கள் மேலே எழும்பட்டும்; அங்கே சூரிய ஒளியானது அவர்கள் ஆத்துமாக்களின் மீது மறுபடியுமாக பிரகாசிக்க ஏதுவாக இருக்கும். அவர்கள் தாமே அந்த மகத்தான வான விளிப்பினின்று - இருளான மேகங்களுக்கு கீழாக திடுமெனக் கீழே விழுந்து விட்டார்கள். அவர்கள் நேராக அழுக்கிற்குள்ளாக, நேராக கீழே பாவத்துக்குள் விழுந்து விட்டார்கள். ஆனால் ஒரு காலத்திலே அவர்கள் அங்கே மேலே சூரிய ஒளியில் வாழ்ந்தார்கள். கர்த்தாவே அவர்கள் திரும்பவுமாக செல்ல விரும்புகிறார்கள். கர்த்தாவே இன்றிரவு அவர்களை மறுபடியுமாக சேர்த்துக் கொள்

ளும். அங்கே மேலே இருப்பதை கண்டி ராதவர்கள் யாராவது ஒருவர் இங்கே இருப்பார்களானால்....

243. இங்கே இருக்கின்ற எல்லாம், ஏவுகணை மற்றும் எல்லாம் சரியாக உமது வார்த்தையின் பிரகாரமாகவே இருக்கின் றது, சரியாக எப்படி நடந்தேறப் போகின் றதோ அதே விதமாகவே காரியங்களும் இருக்கின்றன. இன்றைக்கு உலக சபையா னது என்ன செய்துள்ளனர் என்று நாம் காண்கிறோம். நோவாவின் நாட்களில் எவ்வாறிருந்ததோ, சோதோமின் நாட் களில் எப்படி காண்கிறோம், என்ன நடக்கும் என்று இயேசு கூறியுள்ளாறோ சரியாக அதே விதமாக இருப்பதை நாங்கள் காண்கிறோம். நில நடுக்கத்தால் கடலில் உண்டாகும் ஆழிப் பேரலைகள்; எவ்விதமாக பெண்கள் நடப்பார்கள், ஆடை உடுத்துவார்கள், மற்றும் எவ்வித

மாக அவர்கள் பிறர் விவகாரங்களில் எப்பொழுதும் தலையிடுபவர்களாக இருப் பார்கள், மற்றும் அவர்கள் எவ்விதமாக தாங்கள் விரும்புகிற விதமாக நடப்பது, மினுக்கி மற்றும் முறுக்கி நடப்பது மற்றும்... சரியாக அந்த தீர்க்கதரிசி கூறின வித மாகவே உள்ளன. “இரும்பும் களிமண் ணும் ஒன்றுக்கொன்று ஒவ்வாது” என்று தானியேல் கூறியிருந்தான். ஆகவே, ஓ, ஒவ்வொரு காரியமும், கர்த்தாவே, அது நிறைவேறிவிட்டது. நாங்கள் சரியாக கடைசி காலத்தில் இருக்கின்றோம். கர்த் தாவே, நிழல்கள் விழுந்து கொண்டிருக் கின்றன. சிகப்பு விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன, மணிகள் அடித்துக் கொண்டிருக்கின்றன.

244. ஓ தேவனே, சீக்கிரத்தில் அந்த தூதன் தன் காலை நிலத்தின் மீதும் சமுத்திரத்தின் மீதும் வைத்து தன் கைகளை

மேலே உயர்த்தி “இனி காலம் செல்லாது!” என்று கூறுவார் என்பதை உம்முடைய மக்கள் உணரட்டும்.

அப்போது ஓ, எப்படிப்பட்ட ஒரு அழுகையும் துக்கிப்பும்;

இழக்கப்பட்டவர்களிடம் தங்கள் முடிவானது எடுத்துக் கூறப் படும்போது; அது எவ்விதமான அழுகையும் பற்கடிப்பு மாயிருக்கும் அவர்கள் பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கிக் கதறுவார்கள், அவர்கள் ஜெபிப்பார்கள், ஆனால் அந்த ஜெபம் மிகவும் காலதாமதமான ஒன்றா யிருக்கும்.

245. இப்பொழுதே இரட்சிப்பின் நாளாகும். “ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக் கடவன்”. கர்த்தாவே, இதை அருளும்.

246. அந்த எடுத்துக்கொள்ளப்படுதலின் நாளிலே இங்கே ஒரு நபர் கூட அதை தவற விட வேண்டாம். காத்துக் கொண்டிருப் பவர்களோடு எங்களையும் சேர்த்து பரிசுத்த ஆவியானவர் மேலே எடுத்துக் கொள்ளும் வரையிலும் அல்லது எங்கள் சுதந்தரவீதத்தில் இளைப்பாறச் செல்லும் வரையிலும் நாங்கள் தாமே தேவனுடைய அன்பிலும் மற்றும் தேவ ஆவியிலும் மிகவுமாக நிறையப்பட்டிருப் போமாக. நீர் தானியேலிடம் “தானியேலே, நீயோவென்றால் போயிரு; நீ இளைப் பாறிக்கொண்டிருந்து, அந்த நாளிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய்” என்று கூறியுள்ளீரே.

247. ஓ தேவனே, “அநேகரை பாவத் திலிருந்து நீதிக்குட்படுத்து கிறவர்கள் நட்சத்திரங்களை விட என்றென்றைக்கு முள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்

கள்" என்று நீர் கூறியிருக்கிறீர். அது எப்படிப்பட்ட ஒரு நாள்! ஆனால் அந்த துன்மார்க்கர் அழிவுக்குள்ளாக திருப்பித் தள்ளிவிடப்படுவார்கள். ஓ தேவனே, மனிதர் இப்பொழுது தங்களுடைய வாழ்க்கையின் நிலைமையை உணர்ந்து கொள்ளும்படிக்குச் செய்யும். அதனால் என்றென்றைக்கும் முடியாத ஒரு சூழ்நிலைக்கு முன்னதாகவே அவர்கள் தாமே நீதியுள்ளவராகிய அவரிடமாக திரும்புவதற்கு ஏதுவாக இருக்கும். இதை அருளும் பிதாவே.

# முழு பைத்தியம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து